**மெதகம பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மெதிகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டில் மூலதன மாக்கப்பட்ட ரூபா 500,000 பெறுமதியான 03 உபகரணங்களில் பெறுமதி மீளாய்வாண்டில் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மீண்டும் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது அத்தவறினை சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்கள் சீராக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,599,620 ஆன கதிரைகளின் பெறுமதி தளபாடங்கள் உபகரணங்களின் கீழும் காணி மற்றும் கட்டிடங்களின் கீழும் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது அத்தவறினை சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | இர்டிப்பு பிழைகள் ஏற்படாத வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட 05 நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 8,341,743 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஒரு நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட இருந்த ரூபா 179,834 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2023 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது குறித்த தவறுகளை சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | சொத்துக்களின் பெறுமதி மூலதனம் ஆக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வாரச்சந்தையில் அமைந்துள்ள ஆட்டு இறைச்சி, பன்றி இறைச்சிகளை வியாபார நிலையங்கள் மற்றும் சிறுவர் பூங்கா என்பவற்றறிகாக மின்சாரம் மற்றும் நீர் இணைப்பு வழங்குவதற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 76,500 ஆனசெலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டு இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது செலவினத்தை மூலதனமாக்கி கணக்குகளை சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | செலவினங்களை சரியாக நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (உ) | மாநாட்டு மண்டபத்துக்கு மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 767,050 பெறுமதியான சப்த கட்டுப்பாட்டு இயந்திரங்களின் பெறுமதியை காணி மற்றும் கட்டிடங்களிலும் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களிலும் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2003 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது தவறினைச் சீராக்குவதாக தயவுடன் அறியத் தருகிறேன். | இரட்டிப்பு வழு ஏற்படாத வகையில் சரியாக நிதிக் கூற்றுக்களில் பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஊ) | விளையாட்டரங்கின் மலசலகூட முறைமையை மேம்படுத்து வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 100,000 தொகையை நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 10,000,000 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது அவ்வாறான அதிகரித்த தொகையை அகற்றி கணக்கினை சீராக்குவதற்கு குறித்துக் கொண்டதாக தயவுடன் அறியத் தருகிறேன். | பெறுமதி சரியாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (எ) | சபையினால் வெளித் தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்ட 02 வழக்குகள் மற்றும் வெளி தரப்பினால் சபைக்கு எதிராக தொடரப்பட்ட 02 வழக்குகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் அவ்வாறான தகவல்களை வெளிப்படுத்துவதாக தயவுடன் அறிய தருகின்றேன் | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவேண்டும். |

### 1.6.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட பயிற்சி பாடநெறிக்கு சபையின் உத்தியோகத்தர் சமூகமளித்திருந்ததுடன் அதற்குரியதாக பயிற்சியாளரால் தனிப்பட்ட ரீதியில் செலவிடப்பட வேண்டிய 50 சதவீத பங்களிப்பான பாடநெறிக் கட்டணமாக ரூபா 19,750 தொகை சபையில் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் அத்தொகையை உத்தியோகத்தரின் மாதாந்த சம்பளத்தில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன் | பாடநெறிக்காக தனிப்பட்ட ரீதியில் செலவிடப்பட வேண்டிய கட்டணங்களை குறித்த உத்தியோகத்தரால் செலுத்தப்பட வேண்டும் |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,709,864,049 கூட்டுப்பெறுமதியான 05 சொத்து விடயங்கள் தொடர்பாக துறைசார் மதிப்பீட்டாளர்கள் அறிக்கை உரித்து உறுதி மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் மற்றும் நிலுவை இயந்திர வருமானம் தொடர்பான ஆவணம் சமர்ப்பிக்கப்பட மையால் அச்சொத்துகளின் பெறுமதி கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது | சபைக்கு உரிய காணி மதிப்பீடு செய்யப்பட்டு தீர்வு செய்வதற்கும் ஏனைய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன் | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2013 ஜூன் 28 ஆம் தேதி 1816/43 ஆம் இலக்க வர்த்தமானி | சபைக்குச் சொந்தமான 03 வாசிகசாலையில் 5966 வாசிப்பாளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்த துடன் அவர்கள் புத்தகத்தை வெளியே எடுத்துச் செல்லும் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 100 ஆன நூலாக வைப்பு தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொண்டு எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன் | பிரதேச சபையினால் தற்போது கடைப்பிடித்து வரும் நூலகம் தொடர்பான உப விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 8 ஆம் பிரிவு மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | சபையினால் 2017 முதல் 2021 காலப் பகுதியில் அங்கீகரிக்கப் பட்டிருந்த 137 கட்டிட திட்டங்களைப் பரீட்சித்து இணக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை | 2017 முதல் 2021 காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டு இருந்த கட்டிட திட்டங்களுக்காக 36 இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடதிட்டங்களுக்குரிய நிர்மானங்களில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் அதற்காக இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது | அங்கீகரிக்கப்பட்ட கட்டிட திட்டங்களுக்குரிய நிர்மாணங்கள் பரீட்சிக்கப்பட்டு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | சபையால் பேணிச்செல்லப்பட்டிருந்த விதி விளக்குகள் பதிவேட்டின் பிரகாரம் பிரதேசத்தில் 690 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்த போதும் வீதிகளுக்கு வெளிச்சமுட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வில்லை | எமது சபையால் இதுவரை இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இருந்ததுடன் சிக்கல்களை மாவட்ட கூட்டிணைப்பு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,588,389 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,897,043 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 825,538 | 1,400,095 | 1,035,237 | 364,858 | 955,538 | 858,399 | 591,750 | 266,648 |
| (ii) | வாடகை | 23,900,017 | 33,162,510 | 24,373,574 | 8,788,936 | 22,568,300 | 30,248,347 | 23,592,018 | 6,656,329 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 532,320 | 216,708 | 216,708 | - | 733,312 | 253,628 | 253,628 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 17,797,300 | 9,290,194 | 6,289,744 | 3,000,450 | 21,616,020 | 7,310,751 | 5,913,110 | 1,397,642 |
| | | 43,055,175 | 44,069,507 | 31,915,263 | 12,154,244 | 45,873,170 | 38,671,125 | 30,350,506 | 8,320,619 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 44,069,507 ஆன மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதிவரை ரூபா 12,154,244 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 27 சதவீதம் ஆகும் | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன் | சபையினால் ஆண்டுக்குரிய பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சபைக்கு சொந்தமான 12 ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியமைக்காக பெற வேண்டிய ரூபா 16,733,475 ஆன கேள்வி ஆதன குத்தகை வருமானத்திலிருந்து 2022 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு நிலுவை கேள்வி குத்தகை வருமானம் ரூபா 2,239,152 ஆக இருந்தது. மேலும் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை குத்தகை வருமானத்தில் அறவீடு 7 சதவீதம் அளவிலான குறைந்த அளவைக் கொண்டிருந்தது. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கும் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | சபைக்கு பெற வேண்டிய நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 143 கடைகளிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 2,120,390 ஆக இருந்தது. | வருமான பரிசோதகருக்கும் வியாபார நிர்வாக உத்தியோகத்தருக்கும் அறிவிக்கப்பட்டு நிலுவைத் தொகைகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்கு பெற வேண்டிய நிலுவை வருமானத்தை விரைவில் அறவிப்பட வேண்டும் |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரம் தொடர்பான பரிசோதனையின் போது வியாபார அனுமதிப்பத்திரங்கள் மற்றும் வியாபார வரி அறவிட படவேண்டிய 876 வியாபாரங்கள் இனங்காணப்பட்டு இருந்ததுடன் 363 வியாபாரகளுக்காக மாத்திரம் வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது | 2022 ஆம் ஆண்டின் வியாபார பரிசோதனையின் போதும் 2023 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட புதிய வியாபார நிலையங்கள் அடிப்படையில் மேலும் எமது வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அதைத் தருகிறேன் | சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்கள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (உ) சபைக்கு சொந்தமான 03 இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியதால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படவேண்டிய ரூபா 368,960 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிட மிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 69,667 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,266,529 ஆக இருந்தது. | குறித்த நிலுவைத் தொகைகளை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிலுவை முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்றத் தண்டப் பணத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேறறுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த செயலாற்றல் திட்டத்தத்தில் உள்ளடக்கப்பட்ட 98 செயற்பாடு களிலேயே 70 செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படாத இருந்ததுடன் அத்திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த 06 செயற் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக சுமார் ரூபா 985,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நிலைமையில் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 70 செயற்பாடுகளை செயற்படுத்த முடியாமல் போனயிருந்தது.அவ்வாண்டில் காணப்பட்ட அதிக மழை காரணமாக சில வீதிகள் கழுவி செல்லப்பட்டு இருந்தமையால் பொதுமக்களால் கௌரவ உறுப்பினர்களிடம் செய்யப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் அவசரத் தேவைபாட்டின் பேரில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவ்வாறான 06 செயற்பாடுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டன. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகள் ஆண்டிலேயே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) பிரதேச சபைக்குரிய கழிவு பொருள் மீள்சுழற்சி நிலையத்தை மேம்படுத்துவதற்காக 2021-2022 | மெதகம பிரதேச சபைக்குரிய கழிவுப் பொருள் மீள்சுழற்சி நிலையத்தில் 700 kg சேதனப் பசளை உற்பத்தி | சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியில் ரூபா 1,114,807 செலவிடப்பட்டு இருந்த போதும் அதில் சேதனப் பசளை உற்பத்தி மேற்கொள்ளப்படாமல் இருந்ததால் அழிவடையாத கழிவுகளை் முறையற்ற வகையில் வெளியேற்றப்படுவது 2002 செப்டம்பர் 23 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது | செய்யப்பட்டிருந்தது. அச்சேதன பசளையின் செயன்முன்றேற்றத்தை பரீட்சிப்பதற்காக ஊவா வெள்ளஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதும் இதுவரை பதில் கிடைத்திருக்க வில்லை. எதிர்காலத்தில் இந் நடவடிக்கைகளில் மேலும் முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | எடுக்க வேண்டியதுடன் உக்காத கழிவுகளை முறையாக வெளியேற்றுவதற்க ாக நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பிரதேச சபையால் வழங்கப்பட்டிருந்த 25 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்த போதும் அந்த அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்த பட்டிருக்கவில்லை | 2019 ஆம் ஆண்டு முதல் நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமையின் பின்னர் உருவாகிய எரிபொருள் பிரச்சினை காரணமாக முறையாக கைத்தொழில்களை பரீட்சிப்பதற்கு முடியாமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் அந் நடவடிக்கைகளை முறைப்படுத்த எதிர்பார்த்து உள்ளேன் | சபையினால் அதிகார பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டும் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பிரதேச சபைக்குரிய காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மெதகம பஸ் தரிப்பு நிலையக் கட்டிடம், மொனராவன முன்பள்ளி பாடசாலை கட்டிடம் மற்றும் அமுனேகந்துர சனமண்டபம் போன்ற கட்டிடங்களின் பெறுமதி ஏற்பட்டு மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது கட்டிடங்களின் தற்காலிக மதிப்பீடு ஒன்று மேற்கொண்டு அப்பெறுமதியை கணக்கீடு செய்வதாக தயவுடன் அறியத் தருகிறேன். | சபைக்கு சொந்தமான சொத்துகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | முன்னேற்றமடைந்த பிரதேசங்கள் இறுதியாக 2015 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு இருந்தபோதும் வீதவரி அறவிடக்கூடிய பிரதேசங்களை விரிவுபடுத்துவதற்கு சபையினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | முன்னேற்றமடைந்த பிரதேசங்களை விரிவுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பகுதி பகுதியாக அல்லது கட்டணங்களை நில அளவை திணைக்களத்துக்கு செலுத்தி முன்னேற்றமடைந்த பிரதேசங்களை விரிவுபடுத்துவதற்கு எமது சபையால் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு வருகின்றது | வீதவரி அறவிடக்கூடிய பிரதேசங்களை விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) இறுதியாக வீதவரி 2015 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்த துடன் கால ரீதியாக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | மதிப்பீடு செய்வதற்கு தேவையான ஆதனங்களின் அட்டவணைகள் 2015 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும் அதற்கான பூரண அறிக்கை மொத்த சபைக்குக் 2020 ஆம் ஆண்டிலேயே கிடைத்துள்ளது. பொதுச்சபையின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு மதிப்பீட்டு எதிர்ப்புகளை கோரி எதிர்ப்புப் பரிசோதனை 2022 ஆம் ஆண்டில் முடிவடைந்து 2023 ஆம் ஆண்டில் செயற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதால் கால ரீதியாக மதிப்பீடுகளை மேற்கொள்ள முடியவில்லை என அறியத் தருகிறேன் | வீதவரி மதிப்பீடு காலரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டும் |

**3.4 விளைவற்ற குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஏப்ரல் 27 ஆம் திகதி சபையின் கேட்போர் கூடத்திற்காக ஒலிபெருக்கி முறைமையொன்றை கொள்வனவு செய்வதற்குரிய ரூபா 767,050 செலவிடப்பட்டிருந்ததுடன் 2023 ஜனவரி 20 ஆம் திகதி வரை அதனை கேட்போர் கூடத்தில் பொருத்தப்படாதிருந்ததுடன் குறித்த ஒலிபெருக்கிகள் முறைமைக்கான ஓராண்டு உத்தரவாத காலம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு முன்னர் முடிவடைந்த காணப்பட்டது. | தற்போது இந்த ஒலிபெருக்கி முறைமை பொருத்தப்பட்டு வருவதாக தயவுடன் அறியத் தருகிறேன் | சபைக்கு சொந்தமான சொத்துக்களை செயற்தறினாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்த வேண்டும் |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 5 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 06 ஊழியர்களுக்கு பற்றாக்குறை காணப்பட்டதுடன் 2023 ஜனவரி 23 ஆம் திகதி வரையில வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | இந்த பற்றாக்குறை தொடர்பாக மாதாந்த பதவியணி தகவல்கள் அறிக்கை மூலம் அறிவிக்கப்படுகின்றன | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் ஆண்டின் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையே 7 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையிலும் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 68 சதவீதம் முதல் 3 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக் கப்பட்டதால் வருமான செலவினக் கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | மீளாய்வாண்டில் நாட்டில் காணப்பட்ட சீரற்ற பொருளாதார சிக்கல்கள் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் பெறுவனவுகள் எதிர்பார்த்த அளவில் கிடைக்காதிருந்ததுடன் சில செலவின தலைப்புகளில் பல எதிர்பார்க்கப்பட்ட செலவின அளவு அதிகரித்திருந்ததுடன் எதிர்காலத்தில் இவ்வாறான விலகல் குறையும் வகையில் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பாக முறையான தெளிவான பாதீட்டைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன். | சரியான பாதீடு தயாரிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் |